## OS No. 18/2017, நாள்: 18-03-2021

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாதன் | வயது | : 67 |
| தந்தை பெயர் | : சின்னமுனியப்பன் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : பென்றஹள்ளி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

வா.சா.1 ___ மாதன் ஆஜர் முதன்மை விசாரணை :-

நான் இவ்வழக்கில் வாதி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன்.

27.4.1940ம் தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகும். என்னுடைய பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 10) வா.சா.ஆ.2 ஆகும். (சில ரசீதுகளில் கதவு எண் இல்லாததால் ஆட்சேபிக்கப்பட்டது) என் பெயரில் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 23) வா.சா.ஆ.3 ஆகும். (மேற்படி மின் இணைப்பு குறித்து வழக்கில் கூறாததால் ஆட்சேபிக்கப்பட்டது) என்னுடைய குடும்ப அட்டையின் உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகும். என்னுடைய வாக்காளர் அடையாள அட்டையின் உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகும். என்னுடைய ஆதார் அடடையின் உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆகும். 11.11.2016ம் தேதியில் நான்

வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பிய மனுவின் நகல் வா.சா.ஆ.7 ஆகும். 15.11.2016ம் தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.8 ஆகும்.

(வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது)

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.